கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13.09.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அகில இந்திய பயிர்ச் சிலந்திகள் ஆராய்ச்சி திட்டதின் கீழ் கூடும் ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டம்**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய பூச்சியியல் துறையில், அகில இந்திய பயிர்ச் சிலந்திகள் ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டம் (2012–2023) 11.09.2024 அன்று நடைபெற்றது. இயக்குனர் பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் முனைவர் மா.சாந்தி, தொடக்க விழா பேருரை ஆற்றினார். மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிர் சிலந்திகள் ஆராய்ச்சியின் துவக்கம் பற்றியும் மற்றும் அதன் நோக்கங்கள் வளர்ந்து வரும் புதிய வகை பயிர் சிலந்திகள் அதன் தாக்கங்கள் குறித்தும் விரிவுரை ஆற்றினார்.

தோட்டக்கலை துறை முன்னாள் இணை இயக்குநர் முனைவர் நா.க.கிருஷ்ணகுமார், ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டத்தின் தலைவர், பயிர்களை தாக்கும் சிலந்தி வகைகளை பற்றியும், ஒருங்கிணைந்த பயிர் சிலந்திகள் மேலாண்மை, பயிர் சிலந்தி எதிர்ப்பு திறன் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை, அயல் நாட்டு பயிர் சிலந்தி வகைகளின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் பயிர் சிலந்தி வகைகள் கண்டறிதல், பயிர் சிலந்திகள் எண்ணிக்கை மற்றும் சேதாரத்தை கணக்கிடுதல் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு சென்றடையும்படி செயல்படுமாறு அறிவுரைத்தார். பயிர் சிலந்திகளினால் ஏற்படும் மகசூல் இழப்பு வருமான இழப்பாக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்றார். மாணவர்கள் அகில் இந்திய அளவில் உயர்ந்த பதவிகளை அடைய முயற்சிக்க வேண்டும் என்று கூறினார்.

ஐந்தாண்டிற்கு ஒரு முறையான கூட்டத்தின் உறுப்பினர்கள் இயக்குநர் (NCIPM) முனைவர்.சுபாஷ் சந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக முன்னாள் ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் கு.ராமராஜு, PGS முன்னாள் தலைவர் முனைவர் ந.ஸ்ரீனிவாசா, UAS, பெங்களூரு, முனைவர் ரவீந்தர் சிங்க் சந்தல், (ஓய்வு) பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை (CSKHPKV), பலம்பூர், முனைவர் அர்ஜுன் சிங்க் பாலோடா, மண் கணுக்காலி பூச்சிகள் ஒருங்கிணைப்பாளர் மற்றும் முனைவர் சி.சின்னமாதே கௌடா பயிர் சிலந்திகள் ஒருங்கிணைப்பாளர் UAS, பெங்களூரு, உடன் கூட்டத்தில் பங்கேற்றனர். முனைவர் ம.முருகன், பேராசிரியர் மற்றும் தலைவர் பூச்சியியல் துறை வரவேற்புரை ஆற்றினார். பூச்சியியல் துறை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மண் கணுக்காலி பூச்சிகள் ஆராய்ச்சியாளர்கள், கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் உடன் பங்கேற்றனர். முனைவர் எ. சுமதி முடிவுரை ஆற்றி நல்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**